உ

சிவமயம்





## ★ பலன்தரு பாராயணப் பாடல்கள் ★

திருச்சிற்றம்பலம்

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே

- திருவாசகம்

திருச்சிற்றம்பலம்.

ஏழாலை வடக்கு

## ★ வீரவாகு சோதிப்பிள்ளை ★

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை

## ★ சத்தியானந்தசிவம் கனகம் ★

ஆகியோர்

# நினைவு வெளியீடு

14.03.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

O சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற்சார் சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனும் நான்மறைச்
செம்பொருள்வாய்
மெய்வைத்த சீர்திருத் தேவாரமுந் திருவாசகமும்
உய்யவெந் தரச்செய்த நால்வர் பொற்றாளெம் உயிர்த் துணையே

★ ★

O மாவாய்மைச் சம்பந்தர் வாக்கரையர் வன்றொண்டர் வாதவூரர்
பூவாயின் தேறலெனு நான்மறைத் திருக்கடைக் காப்பு சீர்ச்சொல்
தேவாரந் திருப்பாட்டு திருவாசகம் முதலாச் செப்புகின்ற
நாவாரே நாவாயாம் பவக்கடலைக் கடந்து முத்திநகர்
சேர்வதற்கே.

★ ★

O ஆசையறாய் பாசம்விடா யானசிவ பூசை பண்ணாய்
நேசமுட னைந்தெழுத்தை நீநினையாய் —சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே யுனக்கென்ன வாய்.

★ ★

O பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத்தாள் போற்றி.

★ ★

O தத்துமு தெயில் மூன்றுந் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர்அறு
பத்துமூவர் பதமலர் போற்றுவாம்.

★ ★

O தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார்
பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்

26-04-1922



திருவடி

13-02-1996

★ வீரவாகு சோதிப்பிள்ளை ★

யுவ ஆண்டு மாசி முதலாம் நாள் செவ்வாய் சித்தயோக அனுஷ நடசத்திரத்தோடு கூடிய தேய்பிறை நவமித் திதி

தோற்றம்

14-10-1926



திருவடி

19-01-1996

★ சத்தியானந்தசிவம் கனகம் ★

யுவஆண்டு தை 5ஆம் நாள் வெள்ளி சித்த யோகப் பூராட நட்சத்திரத்தோடு கூடிய தேய்பிறைச் சதுர்த்தசித் திதி

வெளியீடு: சிவநெறிப்பண்ணை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யாழ்ப்பாணத்துப் பேரூர்களில் ஏழாலையும் ஒன்று. இது திருநெறித் தமிழ்வல்லோர் சிவாகமங்கள் படித்தோர் கருநெறிப்பகை ஞானநூல் பல கற்றோர், குருநெறிக்குரிய இலக்கண இலக்கியங்கள் பழுதறக் கற்றபேர்கள், பெருநெறிப் பல காவியங் கதை எழுத வல்லோர், நால்வர் பதிகத்தொலி புகழ்ந்தோதும் நல்லோர் புராண விருத்தங்களைப் பாடியும் - பயன்சொல்லியும் - கேட்டும் பூரிக்கும் பக்குவமானோர், பல்தொழில் வித்தகர்கள், அடியார்க்கும் ஆதுலர்க்கும் அன்புசெய் அன்பர் மடங்கள், வேதியர் வேள்வி நெடும்புகை கொண்டெழும் ஆலயம் பல சூழ்ந்தவும், உழுதூண்பெருக்கும் வளமிக்க கோழைபடா மேழிச்செல்வர் பெருமளவில் வாழ்பதியும் இதுவாகும் இத்தோடு உலகம் உவக்கும் உத்தம நல்லறிஞர்களையும் கலா வித்தகர்களையும், அறிவியலாளர்களையும் உருவாக்கிக் கொடுக்கும் நல்லாசிரியர்களை அன்றும் இன்றும் கொண்ட ஊர் நீறு பூசி அன்பொடு புனிதன்தாள் நேசித்து ''பிறவா வரமருள் சிவ சிவ அரகர'' என யாசித்து நிற்கும் சிவசமயத்தவர் செறிந்த செவ்வூர் இது.

இன்று ஏழாலை என்றதும் ஏழு கோயில்கள் கொண்ட ஊர் என்ற ஐதிகந்தான் யாவர் நினைவிற்கும் முன்வரும். இன்றைய நிலையில் அஞ்சேல்! என்றருள் செய்யும் இவ்வூர் அருள்நிலைக் கோயில்கள் பற்றிப் பலர் சிந்திப்பர் இன்னுஞ் சிலர் இங்கு வாழ்ந்த - வாழ்ந்து கொண்டிருக்கும் தபோதனர் - அறிஞர் - அடியார் பற்றி எண்ணுவர். வேறு சிலர் இவ்வூர் மண் வளம் பற்றி ஆய்வர். இவ்வாறு பற்பல ஆய்வுக்கும் சிந்தனைக்கும் இடங்கொடுக்கும் இவ்வூர்ப் பெயரின் முறையான ஆய்வு ஐதிகத்திலிருந்து யதார்த்தத்தை நிலைநிறுத்தும்.

ஏழாலை பல குறிச்சிகளைக் கொண்டது அவற்றுள் ஒன்று புதுக்கிணற்றடி இது ஏழாலை வடக்கையும், கட்டுவன் தெற்கின் பெருநிலப்பரப்பையும் உள்ளடக்கிய இடமாகும். இவ்விரண்டு ஊர் எல்லைகளையும் உள்ளடக்கிய இக்குறிச்சி வாழ்பவர்களுக்குச் சொந்தமான சோழங்கராயன்[1], தேவங்கராயன், தேவன்ஒல்லை, பெருமாள் ஒல்லை, வளவன்கூடல், வாரிவளவு, செண்பகவளவு, ஆள்விழுந்தான் சூழியஓடை, பிள்ளார்ஓடை, கோஞ்சிட்டி, பூக்கோட்டியன், சிமிழன் களையம்பன்[2], எழுகாலை, மூட்டோலை, கோட்டைக்காடு முதலான இடப்பெயர் ஆய்வுகள் புதிரான அக்கறைபான யதார்த்த உண்மையை உறுதி செய்யும்

---

1 இப்பெயர் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் யாழ்ப்பாண இராச்சியம் என்ற வரலாற்று நூலில் ஆயப்பட்டது.

2 யானை கட்டுமிடம்.

இக்குறிச்சியின் மேற்காட்டிய இடப்பெயர்களும் ஏனையவும் கட்டுவன் ஐயனார் கோயில் கரண்வைடக்குளத்தடியிலிருந்து ஆரம்பித்து ஆராயப்படவேண்டியதாகும். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இது தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டியதுமாகும். ஆயுங்கால் இங்கு நிலவிய பண்டைத் தமிழாட்சியின் கூறுகள் வெளிப்படும் அப்பொழுது 'எழாநிலை'' என்ற இயற்சொல் 'எழாலை' என விகாரம்பெற்று ''ஏழாலை'' என மருவி வந்தமை புலப்படும். இன்று 'எழுகாலை' எனக் கூறப்படும் இடப்பெயரே 'எழாநிலை' என்ற இயற்பெயரின் பிறப்பிடம் என்பதனை ஆய்வு தெளிவுபடுத்தும் இன்று கூறப்பட்டுவரும் ஏழு கோயில்கள் கொண்டவூர் 'ஏழாலை' என்ற பெயர், இங்கு கூறப்பட்டுவரும் ஏழு ஆலயங்களினதுந் தோற்றக் காலக் கால ஆராய்ச்சிக்கு ஒவ்வாத கருத்தாகும். இக்கோயில்களின் தோற்றகாலங்களிற்கு முன்னர் தொடக்கம் 'ஏழாலை' என்ற இவ்வூர்ப் பெயர் இருந்து வருகின்றதென்பது ஞாபகத்திற் கொள்ளத்தக்கதாகும்

**சோதிப்பிள்ளை - வீரவாகு:** மேற்காட்டிய தொல்லூரின் வடபாலுள்ள புதுக்கிணற்றடிக் குறிச்சியில், தொன்மைமிக்க செம்மைசால் சைவ வேளாண் குடும்பத்தில் வந்தவர் வேலாயுதர். அவர் மகன் காசிநாதர் அவர் மகன் சண்முகம், சண்முகத்தின் மனைவி முத்துப்பிள்ளை இவர்களின் இளையமகன் வீரவாகு

முன்பந்தியில் காட்டிய சண்முகம் குலமுறைத் தொடர்புடையோரே ஐயம்பெருமாள், கந்தர், கோணேசர், பொன்னம்பலம், கனகசபை, சிவகுரு (தம்பிமுத்து) ஆகியோராவர். சிவகுருவின் மனைவி கதிராசிப்பிள்ளை. முத்துப்பிள்ளையும் சிவகுருவும் உடன்பிறந்தோர் இவ்வழியில் தாய் மாமன் மகளாகிய சோதிப்பிள்ளைக்கு வீரவாகுவை 1947இல் திருமணஞ் செய்து வைத்தனர். இவர்கள் இல்லற வாழ்வில் மலர்ந்த சுடர்களே கோபாலசுந்தரம், சண்முகசுந்தரம், சிவஞானசுந்தரம், தவயோகசுந்தரம், மோகனசுந்தரி, மோகனசுந்தரம் என்போர சண்முகசுந்தரம் 1964 பங்குனியிலும், தவயோகசுந்தரம் 1994 மார்கழியிலும் இயற்கை எய்திவிட்டனர்.

குடும்பம் பாரம்பரிய சைவஆசாரமரபில் வந்தது. சமயநியமங்களிலும், ஆலய கைங்கரியங்களிலும் மிக்க ஈடுபாடானவர்கள் குலதெய்வங்களான திருவாலங்காட்டுச் சித்திவிநாயகர். நாய்வாலி ஞானவைரவர் நித்திய நைமித்திக பூசைகளும் திருப்பணிவேலைகளும்செய்து வருபவர்கள். இவ்வாறாக மலர்ந்து வந்த குடும்பவாழ்வில் 1972இல் சோதிப்பிள்ளை பொட்டுப்பூவை இழக்கநேரிட்டது கணவன்வீரவாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எய்திய ஆண்டு இதுவாகும். குடும்பத்திற்கு உற்றார் உதவிகள் இருந்து வந்ததினால் பிள்ளைகள் வளர்ந்து சீரும் பொலிவும் பெற்று வந்தனர்.

தாமுண்டு, தம்நிலமுண்டு, ஊர் உண்டு, வீடுண்டு, தொழிலுண்டு உற்றார் உறவுண்டு என்றமன நிறைவுடன் இருந்துவந்த சோதிப்பிள்ளை குடும்பத்திற்கு மின்வெட்டு நேரத்தில் காரிருள் சூழ்ந்தது இவ் வளவு சுக போகங்களையும் விட்டு இடம்பெயர நேர்ந்தது. இடப்பெயர்ச்சி தாக்கத்தை உண்டாக்கி உடல்நோயை உண்டாக்கியது நோய்க்கான வைத்தியங்கள் செய்யப்பட்டன. நோய் அவற்றை ஏற்கவில்லை இடம்பெயர்ந்து வந்திருந்த ஒட்டுவெளி மிருசுவில் இல்லத்தில் மக்கள், தமையனார், பெருமக்கள் சூழ்ந்திருக்கச் சகோதரி முறையான பொன்னம்மாவின் முகத்தை வருடியபடி நமச்சிவாயப்பதிகங்களின் ஓசையைச் செவி கேட்க யுவஆண்டு மாசி 1 ஆம் நாள் (13-02-96) செவ்வாய்க்கிழமை சித்தயோகமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய தேய்பிறை நவமித்திதியில் மாய வாழ்வின் வினைப்போகம் ஒழித்துச் சிவனடி சேர்ந்தார். இவரில் மிக்க பற்றுக்கோடான இளைய சகோதரியாகிய கனகம் திருநிழல் எய்திய 26ஆம் நாள் இந்நிகழ்வு நடந்த நாளாகும்.

**கனகம் - சத்தியானந்தசிவம்:**

பிறந்த நாள் 14-10-1926. ஊர் ஏழாலை வடக்கு. பெற்றோர் சிவகுரு கதிராசிப்பிள்ளை. சகோதரங்கள் அருளம்பலம் பொன்னையா இலட்சுமிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, சோதிப்பிள்ளை. குடும்பத்தில் இளையபிள்ளை கல்விகற்ற இடங்கள் யா/ ஏழாலைவடக்கு அ.மி.த.க பாடசாலை யா/ கட்டுவன் ஞானோதய வித். யா/ சுன்னாகம் மயிலணிச் சைவ வித். 1944 இல் சிரேட்ட தராதரப் பரீட்சையில் சித்தி பாடசாலைக்காலத்தில் மிக்க விவேகமான மாணவி. 1945ல் ஆசிரிய பயிற்சிப் புகுமுகப் போட்டித் தேர்வில் தெரிவாகி 1946, 1947ஆம் ஆண்டுகளில் கோப்பாய் அரசினர் பெண்கள் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்று, 1949 ஜனவரியில் ஆசிரியப்பணி ஆரம்பம். பணியாற்றியபாடசாலைகள்:-

மாத்/ இரத்தோட்டை அ.த.க. பாடசாலை
யா/ மவுரதீன் பாடசாலை
யா/ கொழும்புத்துறை இ.ம.வி.
யா/ யாழ். புனித சாள்ஸ் ம.வி.
வ/ ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்.
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி
யா/ நல்லூர் விக்கினேசுவர வித்.

55 ஆவது வயதில் 1981இல் ஓய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் 28-01-1956. யாழ் ஈச்சமோட்டை சித்த வைத்தியர் கனக ரத்தினத்தின் மகன் ஆசிரியர் சத்தியானந்தசிவம். மணவாழ்வில்மலர்ந்த செல்வங்கள் தவசீலன், தவச்செல்வன், தவநேசன். பிள்ளைகளுக்கு தக்க பருவங்களில் தகமையான கல்வி புகட்டப்பட்டது. சமய, சமூக நல்லறப் பணிகள் எவற்றிற்கும் முன்னின்று தவும் பண்பினர் தாயார் மிக்க சைவசாரமானவர் மரபிற்கேற்ப அவர் வழி போற்றி நடப்பவர் மூத்த புதல்வர்.

தவசீலன் சித்த வைத்தியர் (D. A. M) மாலினியை மணந்து சுகிர்தா, சுகல்யா என்னும் பிள்ளைகளுக்குத்தந்தையாக இருக்கின்றார் பொறியியலாளர் தவச்செல்வன் இலங்கைவங்கியில் பணிபுரியும் இராச லட்சுமியைத் துணையாகக் கொண்டவர். தவநேசன் அண்மையில் பட்டதாரி ஆசிரியர் ஜெயந்தியை மணந்து கொண்டவர் இவர் யா. ப. நோ. கூ. சங்கத்தில் பணியாற்றி வருகின்றார்.

கனகம் அம்மையாரின் குலதெய்வம் ஏழாலை ஆலங்காட்டுச் சித்திவிநாயகர், மூலமூர்த்தியாக இருந்து அருள் பாலிக்கும் திருப்படி மம், இவர் தந்தையார் விருப்பப்படி இவர் செலவில் செதுக்கப் பட்டதாகும் அங்குள்ள யானை வாகனமும் இவரது உபகாரிப்பேயாம் ஆலயத் திருப்பணிகளுக்கு வேண்டியபோதெல்லாம் கொடுத்துவந்தவர் இதேபோன்று தன் புக்ககத்துள்ள கலட்டிப்புல ஞான வைரவரிடத்தும் நல்லூர் முருகனிடத்தும் அன்பு பூண்டொழுகியவர் சீருந்திருவும் பொலிய செழிப்பாக இறையருளால் வாழ்ந்துவந்த இப் பெருமாட்டி தன் குடும்பத்திறகும் மற்றும் தன் இனபந்துக்களுக்கும் பேரொளியாக இருந்து வந்தவர். இடப்பெயர்ச்சி உளத்தாக்கத்தையும் உடல்நோயை யும் உண்டாக்கியது காலதச்சனிடமிருந்து காப்பாற்றுவதற்கு வேண் டிய வேண்டிய வைத்தியங்கள் செய்யப்பட்டன. ஏமாற்றமே பலனா யிற்று ''வினைப்போகம் ஒழிந்தாற் காயம் தினைப்போதும் நில்லாது'' என்ற மொழிப்படி சாவகச்சேரியில் இடம்பெயர்ந்து வந்திருந்த இல் லத்தில் யுவ ஆண்டு தை 5ஆம் நாள் (19-01-1996) வெள்ளிக் கிழமை தேய்பிறைச் சதுர்த்தசித் திதியன்று சிவசிந்தனையுடன் சுடர் விடு சோதியனாகிய முடியா முதல்வன் திருவடியணைந்தார்.

ஒருவரைத் தொடர்ந்து மற்றவர் துரிதமாக இறையடி சேர்ந்த பாசமிகு இச்சகோதரிகள் இருவரினதும் நினைவையொட்டி அன்னோர் ஆன்மாக்கள் அமைதிபெற்றுப் பேரின்பம்பெற வேண்டிப் பிரார்த்திப் பதுடன், பத்திசெய்வார்க்கு பரம்பரம் அளிக்கும் பாங்குடைத் தமிழ் வேத மந்திரத் திருவருட் பாக்கடலிலுள்ள பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து. ''பயன்தரு பாராயணப் பாடல்கள்'' என்ற பெயரில் வெளி யிட்டு வாழ்வில் நிறைவுபெற்ற அன்னோர் திருவடிகளுக்குச் சமர்ப் பணஞ் செய்கின்றோம், இவற்றை ஓதும்முறை உணர்ந்து ஒருநெறிய மனத்துடன் ஓதி நன்னெறிப் பயனாகிய பெருநெறிக்களாகும் வண்ணம் அன்பர்களை வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம். பண்: நட்டபாடை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

திருவதிகை. பண்: கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறை அம்மானே.

திருவெண்ணெய் நல்லூர். பண்: இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தால் மறவாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்
-துறையுள்
அத்தா உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாலவாய் பண்: காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

இறை இன்பம் பண்: குறிஞ்சி

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

## திருஞானசம்பந்தர்

தோஷம் நீங்க: பண்: பழந்தக்கராகம்

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே.

தாயு நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்
ஆயம்ஆய காயம் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவல மேயவனே.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நங்கிளை கிளைக்குங் கேடுபடாத்திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப் பதிகம் பண்: பியந்தைக்காந்தாரம்

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பண்: நட்டராகம்

நம்பொருள் நம்மக்கள் என்றுநச்சி இச்சை செய்து நீர்
அம்பரம் அடைந்துசால அல்லல் உய்ப்பதன் முனம்
உம்பர் நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன் மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

மனக்கவலைகள் ஒழிய: பண்: காந்தார பஞ்சமம்

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினைஅடர்ந்து எய்தும் போழ்தினும்
அம்மையினுந் துணை அஞ்செழுத்துமே.

பண்: பஞ்சமம்

சூழ்தரு வல்வினையும் உடல்தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கரவம் புனைந்த
தாழ்சடையான் பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்: நட்டராகம்

விருது குன்றமா மேருவினாணர வாவண வெரியம்பாய்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

பண்: புறநீர்மை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி
-விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்குங் கோணமாமலை யமர்ந்
-தாரே

மங்களப் பதிகம்: பண்: காந்தாரபஞ்சமம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

அன்புறு சிந்தை யராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவா ரல்லர் தொண்டு செய்வாரே.

## திருநாவுக்கரசர்

சிவகதி வேண்டி: பண்: கொல்லி

போர்த்தாய் அங்கோர் ஆனையின் ஈருரித்தோல்
புறங்காடரங்கா நடமாடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனையான விலக்கிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிருத்தம்.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூரரனே.

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந்து எய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா! திருவாலவாயா! திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.

பண்: பழந்தக்கராகம்

மண் பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண் பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண் பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனையென்
கண் பொருந்து போதத்துங் கைவிடநான் கடவேனோ.

திருத்தாண்டகம்

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னை அல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றென்றே போற்றா நில்லே.

அர்ச்சனை போற்றித் திருத்தாண்டகம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி என்தாதாய் போற்றி
தொக்கணா என்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத் தீசா போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல்லானாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந் தீயரனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிதும் இலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிதும் அரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

போற்றிசைத் தன்னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண வரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான் மேல் இருந்தாய் போற்றி
எண்ணாயிர நூறு பேராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான் முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் தாயாருடன் பிறந்தார்
 தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா(று) எங்ஙனே போமாறேதோ
 மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்(கு) ஒன்று சொல்லக் கேண்மின்
 திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
 என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

வேண்டிய வேண்டியாங் கெய்த — பண்: பழம்பஞ்சுரம்

முத்தாமுத்தி தரவல்ல முகிழ்மென் முலையாளுமை பங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழையனூரர் மேய
அத்தா ஆலங்காடா உன்னடியார்க் கடியேனாவேனே.

பண்: இந்தளம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
 நித்தல் பூசனை செய்யலுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
 கழலடி தொழு துய்யினல்வால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி
 ஆழ்குழிப் பட்டழுந்து வேனுக்
குய்யுமா றொன்றருளிச் செய்யீர்
 ஓணகாந்தன் தளி யுளீரே.

பண்: கொல்லிக் கௌவாணம்

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
 வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக்கேற்றும்
 சுந்தரனே கந்தமுதல் ஆடை ஆபரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும்
 பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
 கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல்
தொலையர்த காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய இலங்கையர்கோன் வரையெடுக்க அடர்த்துத்
திப்பிய கீதம்பாடத் தேரொடு வாள் கொடுத்தீர்
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறைமறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீர்இன் றெனக்கருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளாநீர் இருந்தீர்
வாழ்விப்பன் என ஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவேற் திருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணியாரூர் புகப்பெய்த அருநிதியம் அதனில்
தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டும்
தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே

மறியேறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மாநிதியந் தருவனென்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள்
கிறியும்மாற் படுவேனோ திருவாணை உண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரென்
றண்மயத்தால் அணிநாவலாரூரன் சொன்ன
அருந்தமிழ்களிவை வல்லாரமநலகாள் பவரே.

பண்: நட்டபாடை

அங்கம்மொழி யன்னாரவ ரமரர் தொழுதேத்த
வங்கமலிகின்றகடல் மாதோட்ட நன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச்சரத் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## மாணிக்கவாசக சுவாமிகள்

திருப்பெருந்துறையில் ஞானஅருள்.

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன் அடியார் அடியாரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே.

திருவுத்தரகோசமங்கையில் ஞானபோதகம்.

கடையவனே னைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்
கொள்ளே.

திருக்கழுக்குன்றில் குருதரிசனம்.

பிணக்கி லாதபெருந்து றைப்பெரு மான்உன் நாமங்கள்
பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்பமேவரும் துன்பமே துடைத்
தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்துமேல் விளையாமல் என்வினை
ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம்நீவந்து காட்டினாய் கழுக்
குன்றிலே.

தில்லையில் வீடு.

பாருருவாய பிறப்பறவேண்டும் பத்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே செங்கமலமலர் போலும்
ஆருருவாய என் ஆரமுதேஉன் அடியவர் தொகைநடுவே
ஓருருவாய நின் திருவருள் காட்டி என்னையும் உய்யக்
கொண்டருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார்

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச்சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

தற்பரம் பொருளே! சசிகண்ட சிகண்டா
சாமகண்டா! அண்ட வாணா!
நற்பெரும் பொருளாய் உரைகலந்து உன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன் என உள்ளத்து அளவிலா உன்னைத்
தந்த பொன்னம்பலத் தரசே
கற்பமாய் உலகாய் அல்லை ஆனாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே.

## திருப்பல்லாண்டு

பண்: பஞ்சமம்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு அவ்வண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளி
சோதிமணிமுடித் தாமமும் நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

## திருமூலர்

ஆற்றரு நோய்மிகும் அவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக் கோயில்கள் ஆனவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே.

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றார்களே.

## 11ஆந் திருமுறை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

இடர்களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படருநெறி பணியாரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மனார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்
## சேக்கிழார்

இல்லறம் நடத்து முறை.

அரசுகொள் கடன்களாற்றி மிகுதி கொண்டறங்கள்பேணி
பரவருங்கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும்பண்பின்
விரவிய கிளையுந்தாங்கி விளங்கிய குடிகள்ஓங்கி
வரைபுரை மாடம்நீடி மலர்ந்துள பதிகள்எங்கும்.

விதிவழி அர்ச்சனை.

சைவநெறி வைதிகத்தின் தருமநெறியொடுந் தழைப்ப
மைவளருந் திருமிடற்றார் மன்னிய கோயில்களெங்கும்
மெய்வழி பாட்டர்ச்சனைகள் விதிவழி மேன்மேல்விளங்க
மொய்வளர் வண்புகழ் பெருக முறைபுரியு மந்நாளில்.

மாகேசுர பூசை.

இன்னவகையால் பெற்றநிதி எல்லா மீசனடியார்கள்
சொன்ன சொன்னபடி நிரம்பக் கொடுத்துத் தூயபோனகமும்
கன்னல் நறுநெய்கறி தயிர்பால் கனியுள்ளுறுத்தக் கலந்தளித்து
மன்னுமன்பின் நெறிபிறழா வழித்தொண்டாற்றி வைகினார்.

சேக்கிழார் மொழியில் சுந்தரர்.

மன்னு மிராமேச்சரத்து மாமணியை முன்வணங்கி
பன்னு தமிழ்த்தொடை சாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்.

அந்தணர் சால்பு.

வருமுறை எரிமூன்றோம்பி மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக்கொண்டு தத்துவநெறியில் செல்லும்
அருமறை நான்கினோ டாறங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க்காளாம் திருவினால் சிறந்த நீரார்.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அருணகிரிநாதர்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல் கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரிமீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தென்குறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமது நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மநுதினமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ வடமொழி வேதத்தில் நாயகமாக இருப்பது ''ஸ்ரீருத்திரம்'' இதுவே வேதத்தின் இருதயமாகும். சிவபெருமானின் தோற்றத்தைச் (விசுவ ரூபத்தை) சொற்களால் விதந்து கூறி வணக்கம் செய்வதே ஸ்ரீருத்திரமாகும் இதனை ''மறைப்பயன் ஆகிய உருத்திரம்'' என்பார் தெய்வச் சேக்கிழார். உருத்திரத்தைத் தெளிவாக உபாசித்து நலம் பெற்றோர் பலர். அதன் பயனைத் தெளிந்த எம் அப்பர்பெருமான் அதன் சாரத்தைத் தமிழில் தாண்டக வடிவில் அருளியுள்ளார் அதுவே ''நின்ற திருத்தாண்டகம்,, ஆகும். நாளாந்த பாராயணத்திற்குரிய பதிகம் இதுவாகும் துன்பநீக்கத்திற்கும் சிவ ஞானப் பெருக்கத்திற்கும் வழி திறக்கும் பதிகம் இதுவாகும் பெருமானுக்குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) ஆட்டும் பொழுது ஓதத்தகுவது இது.]

## நின்ற திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக் கப்பால் ஓர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
எழும் சுடராய் எமஅடிகள் நின்றவாறே 2

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் கால் ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சி யாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடராய் எம்அடிகள் நின்ற வாறே 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறுந் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 5

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
அருமறையோடு ஐம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியுமாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்றவாறே 6

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித் தோல் ஆடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானும் என நினைந்தார்க்கு எளிதே யாகி
அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவ்வியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகி
புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே 8

நீராகி நீள் அகலம் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லஎம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே 9

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம் மடிகள் நின்றவாறே 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய் 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும்பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய் 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணாரா் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் 20

திருச்சிற்றம்பலம்.

★ ★

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாய்எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில் திருவுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங் கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே 3

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி ஆர்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தெம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள்அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனையந்தனை முப்புரம் எய்தல்பாடி
    ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
    நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
    மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
    சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
    கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவப்பாடி
    ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
    மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
    துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
    பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 20

திருச்சிற்றம்பலம்.

## சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
    தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
    சகமேழு மளித்து
உண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
    வுண்டாக்கும் வண்ணம்
கண்டான்சுவை கொள் கரும்பே!
    சகல கலா வல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித் தருள்வாய்
பங்கயா சனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே!
கனதனக்குன்று மைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந் துன்னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ!
உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே!
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித் தருள்வாய்
வடநூற் கடலுந்
தேக்குஞ் செழுந் தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங்கேருக மென்
நெஞ்சத் தடத் தலராத தென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்!
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழு தெளிதெய்த
நல்கா எழுதா மறையும்

விண்ணும் புவியும் புனலுங் கனலும்
வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மெனபாற்
கூட்டும் படிநின் கடைக்க ணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந்
தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே!
சகல கலாவல்லியே.

சொல் விற்பனமு மவதான முங்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொரு காலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்ற மென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பி லுன்போற்
கண் கண்ட தெய்வ முளதோ!
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தடிகள்

கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலதச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்தி விட்டால்
கொட்டி முழக்கி அழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டிய டிவைப்ப ரோவிறை வாகச்சி ஏகம்பனே.

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங்கச்சி ஏகம்பனே.

என்செய லாவதியாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற்றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன ஆவதில்லைத்
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவரு மோசலி யாதிறேன் ஏழைநெஞ்சே.

### வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்தோங்குக
தெய்வ வெண்டி ருநீறு சிறக்கவே.

நமச்சிவாய வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

மேலைவிநி வினைப் பயன்படி இவர்கள் இடம் பெயர்ந்து நலமே வந்த காலை,

- ★ அன்பொடு ஆதரித்து வீடு தந்துதவிய ஒட்டுவெளி மிருசுவில் - சாவகச்சேரி வீட்டுரிமையாளர்கள்- அவர்கள் குடும்பத்தினர்,
- ★ நோயுற்றிருந்த காலை பலவிதத்திலும் உதவியோர்,
- ★ வைத்திய கலாநிதிகள்-மற்றுந் துணை நின்றோர்,
- ★ நலம் வேண்டிப் பிரார்த்தனை பூசனைகள் செய்தோர்,
- ★ இறையடி எய்தியமை அறிந்து தேற்றஞ் செய்தோர் - உடனுதவியோர்,
- ★ பலவிதத்திலும் அந்திய நாளன்று உதவிய உறவினர் ஊரவர், நண்பர்கள், ஒட்டுவெளி அன்பர்கள்,
- ★ செய்தி கேட்டு இடம்பெயர்ந்து நெடுந்தூர இடங்களிலிருந்து அல்லை தொல்லைப்பட்டு வந்து அஞ்சலித்த ஊரவர்,
- ★ வெளியிடங்களிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்,
- ★ இன்று நடைபெறும் புண்ணிய ஆன்மசாந்திக்கிரியைகளிலும், மாகேசுர பூசையிலுங் கலந்துகொண்டோர்
- ★ இப் பயன்தரு பாராயணப் பாமாலையைப் பக்குவமாய் வெளியிட்டுதவிய கைதடி சிவா அச்சகத்தினர்
- ★ இன்னும் உதவிய யாரேனும் எம் நினைவிற்கு எட்டாது விடுபட்டிருப்பின்,

அனைவர்க்கும் உளம் நிறைந்த நன்றிமறவா நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

— குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சிவா அச்சகம், கைதடி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org